# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**17.10.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## மாநில செய்திகள்

### 1. 'ஸ்மார்ட் காவலர்' புதிய செயலி அறிமுகம்

- தமிழக காவல்துறையில் ஸ்மார்ட் காவலர் என்ற புதிய செயலி மூலம் **மின்னணு ரோந்து பணி** என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
- குற்ற ஆவணங்களை துல்லியமாக பதிவு செய்யவும், அதனை பராமரிக்கவும், தரவுகளை முறையாகவும், சிறப்பாகவும் கையாளும் வகையில் ஸ்மார்ட் காவலர் என்ற புதிய இணைய வழி செயலியை தமிழக காவல்துறை தற்போது அறிமுகம் செய்துள்ளது.
- இந்த ஸ்மார்ட் காவலர் செயலி, காவல்துறையில் களப்பணி ஆற்றும் அலுவலர்களின் செயல்பாடுகளை கண்காணிக்கவும், அவர்களது களப்பணிகளின் போது நிகழும் சம்பவங்களை உடனுக்குடன் இந்த செயலி மூலம் பதிவு செய்வதற்கும் கள அலுவலர்களுக்கு **ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டாலோ அல்லது உடனடி உதவிகள் தேவைப்பட்டால்** அது குறித்த தகவலை உடனடியாக உயர் அலுவலர்களுக்கு அவர்கள் தெரிவிக்க ஏதுவாக இந்த செயலி அமையும்.

## மத்திய செய்திகள்

### 1. இந்தியில் எம்.பி.பி.எஸ் படிப்பு

- இந்தி மொழியில் எம்.பி.பி.எஸ் மருத்துவ பட்டப்படிப்பு நடத்துகிற முதல் மாநிலமாக **மத்திய பிரதேச மாநிலம்** உருவாகியுள்ளது.
- இதற்கான பாட புத்தகங்களை அமித்ஷா வெளியிட்டார்.

### 2. உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட முதல் அலுமினியம் சரக்கு ரயில்: ரயில்வேயில் இணைப்பு

- முதல் முறையாக உள்நாட்டிலேயே அலுமினியம் கொண்டு உருவாக்கப்பட்ட ரயில் பெட்டிகளை கொண்ட சரக்கு ரயில் இந்திய ரயில்வேயில் இணைக்கப்பட்டது.
- **ஒடிசா மாநிலம் புவனேஸ்வரத்தில்** அலுமினியத்தால் தயாரிக்கப்பட்ட ரயில் பெட்டிகள் கொண்ட சரக்கு ரயிலை மத்திய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- இந்திய ரயில்வேக்கு இலகு ரக அலுமினிய ரயில் பெட்டிகள் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும். இந்த ரயில் பெட்டிகளால் **14,500 டன்** கரியமில வாயு வெளியேற்றம் தடுக்கப்படும்.
- இந்த ரயிலால் அதிக பாரத்தை சுமந்து செல்ல முடியும். துருப்பிடிக்காமல் நீண்ட காலம் தாக்கு பிடிக்கும் **100 சதவீதம்** மறுசுழற்சி செய்யக்கூடியவை.
- 30 ஆண்டுகளுக்கு பிறகும் புதுப்பொலிவுடன் காணப்படும்.
- நாட்டின் பருவநிலை மாற்ற இலக்குகளை அடைய இந்த ரயில் உதவும் என்று

தெரிவித்தார்.

- வழக்கமான ரயில் பெட்டிகளை விட ஒரு பயணத்தில் **150 டன் கூடுதல்** சரக்கை அலுமினியம் ரயில் பெட்டிகளால் சுமந்து செல்ல முடியும்.
- துருப்பிடிக்காத தன்மை இந்த ரயில் பெட்டிகளின் பராமரிப்பு செலவை குறைக்கும் என்று அலுமினியம் ரயில் பெட்டிகள் தயாரிப்பில் பங்கு கொண்ட **ஹிண்டால்கோ நிறுவனம்** சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சாதாரண ரயில் பெட்டிகளுடன் ஒப்பிடுகையில் அலுமினியம் ரயில் பெட்டிகள் 10 ஆண்டுகள் அதிக ஆயிலை கொண்டுள்ளனர்.
- எனினும் அவற்றின் தயாரிப்பு செலவு சாதாரண ரயில்களை விட **35 சதவீதம்** அதிகம் என்று தெரிவித்துள்ளது.

### 3. மீண்டும் அதிபர் ஆகிறார் ஜி ஜின்பிங்

- சீன கம்யூனிஸ்ட் கட்சியின் இருபதாவது தேசிய மாநாடு தலைநகர் பெய்ஜிங்கில் தொடங்கியது.
- இதில் தற்போதைய **அதிபர் ஜி ஜின்பிங் மூன்றாவது** முறையாக அதிபராக தேர்வு செய்யப்பட உள்ளார்.
- சீன கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய மாநாடு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. இந்த நடைமுறைப்படி **2013 மார்ச் 14ஆம்** தேதி சீன அதிபராக ஜி ஜின்பிங் பதவியேற்றார்.
- 2017-ல் இரண்டாவது முறையாக அவர் அதிபராக தேர்வு செய்யப்பட்டார்.
- அவரது பதவிக்காலம் வரும் 22ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.
- புதிய அதிபரை தேர்வு செய்வதற்காக சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது தேசிய மாநாடு தலைநகர் பெய்ஜிங்கில் தொடங்கியது.
- இதில் கட்சி நிர்வாகிகள் **2,296 பேர்** பங்கேற்றுள்ளனர்.
- வரும் 22 ஆம் தேதி வரை நடைபெறும் இந்த மாநாட்டில் கட்சியின் மத்திய குழுவுக்கு **200 உறுப்பினர்களும்**, ஆட்சி மன்ற குழுவுக்கு 25 உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட உள்ளனர்.
- இறுதியாக கட்சியின் பொது செயலாளர் தேர்வு செய்யப்பட உள்ளனர்.
- சட்டத்தின்படி ஒருவர் பத்தாண்டுகள் மட்டுமே அதிபராக நீடிக்க முடியும் என்ற வரம்பு **2018 மார்ச்** மாதம் நடைபெற்ற சீன நாடாளுமன்ற கூட்டத்தில் அதிபர் பதவிக்கான பத்தாண்டுகள் வரம்பு சட்டபூர்வமாக நீக்கப்பட்டது.
- இதன்படி தற்போது நடைபெறும் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 20 ஆவது தேசிய மாநாட்டில் சீன அதிபர் ஜி ஜின்பிங் **மூன்றாவது முறையாக** கட்சியின் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு அதிபராக பதவி ஏற்க உள்ளார்.
- இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வரும் 23ஆம் தேதி வெளியிடப்பட உள்ளது.

### 4. எண்ம வங்கிமயம்

- குறுஞ்செய்தி வாயிலாக அல்லாமல் ( போன் பேங்கிங்) **அறிதிறன் பேசியின் எண்ம டிஜிட்டல் தொழில்நுட்பம்** வாயிலாக வங்கியின் சேவைகளை

பயன்படுத்த தொடங்கியதால் நாடு பெரும் வளர்ச்சி கண்டு வருவதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- நாட்டில் **75 எண்மு வங்கி** பிரிவுகளை பிரதமர் மோடி காணொளி வாயிலாக தொடக்கி வைத்தார்.
- நாட்டின் எண்ம பொருளாதாரம் ஆனது புத்தாக்க நிறுவனங்களுக்கும், இந்தியாவில் தயாரிக்கும் திட்டத்துக்கும், தற்சார்பு இந்தியா திட்டத்துக்கும் பெரிய அளவில் உதவி வருகிறது.
- **எண்மச் செலாவணி:**
  - விவசாயிகளுக்கான நிதி உதவி திட்டத்தின் கீழ் அடுத்த தவணை வழங்கப்பட உள்ளது.
  - பிளாக் செயின் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எண்ணங்கள் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளை **இந்திய ரிசர்வ் வங்கி** (ஆர்பிஐ) மேற்கொண்டு வருகிறது.
  - பொருளாதாரம் மட்டுமல்லாமல் பல்வேறு முக்கிய அம்சங்கள் அதனுடன் தொடர்பு கொண்டுள்ளன.
  - நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள யூபிஐ வசதியானது பல்வேறு வாய்ப்புகளை தோற்றுவித்துள்ளது.
  - இது போன்ற தொழில்நுட்பமானது உலகிலேயே முதல்முறையாக இந்தியாவில் தான் உருவாக்கப்பட்டுள்ளது என்றார் அவர்.
  - நாட்டில் உள்ள **75 மாவட்டங்களில் 75 எண்ம வங்கி பிரிவுகள்** தொடங்கப்படும் என பட்ஜெட்டில் மத்திய அரசு அறிவித்திருந்தது நினைவு கூறத்தக்கது.